குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.38/2024

ம.சா. 2

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் தேதி வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது..

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனீஸ்வரன் | தொழில் | |
| தந்தை பெயர் | சண்முகையா | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.58 மணி,

Complainant Suresh present. Advocate Mr.G.Prabhu present for Complainant. Accused Silamparasan present. Advocate Mr. Chetty Siddan present for Accused.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி தாரமங்கலம் கிளையின் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை கிடைக்கப்பெற்று அதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மேற்படி வங்கியின் கிளையில் 3 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். நான் சிலம்பரசன்/ஆஜர் எதிரியின் வங்கி கணக்கு எண் 287100050300485 க்கில் கடந்த 2022 ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதத்திற்கான பரிவர்த்தனைகள் விபரம் அடங்கிய வங்கி கணக்கு பட்டியலை எடுத்து வந்துள்ளேன். **அது ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆஜர் எதிரிக்கு எங்களது வங்கியில் இருந்து காசோலை புத்தகம் கொடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் எங்களது வங்கியில் இருந்து ஆஜர் எதிரிக்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரி.

2. மேற்படி காசோலை 29.07.2024 ம் தேதி போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது. அதனுடைய ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **அது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ம.சா.ஆ.7 ஆவணத்தின் படி புகார்தாரர் சுரேஷ் வங்கி கணக்கில் இருந்து ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு 03.12.2022 ம் தேதி ரூ.50,000/– ம் ரூ.48,000/– ம், ரூ.49,000/– மற்றும் ரூ.49,000/– ம் என்று மொத்தம் ரூ.1,96,000/– ம் வந்துள்ளது என்றால் சரி.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இவ்வழக்கு காசோலை திருப்பப்படுவதற்கு முன்பாக எங்களது வங்கியில் இருந்து ஆஜர் எதிரியின் கையொப்பத்தை சரிபார்த்ததா என்றால் வங்கியில் எதிரியால்

கொடுக்கப்பட்டு இருக்கும் மாதிரி கையொப்பத்திற்கு ஒப்பீடு செய்யப்பட்டு தான் காசோலை திருப்பப்படும்.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.18 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.38/2024

ம.சா. 3

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் தேதி வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது..

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிகிருஷ்ணன் | தொழில் | |
| தந்தை பெயர் | வெங்கடேசன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.19 மணி,

Complainant Suresh present. Advocate Mr.G.Prabhu present for Complainant. Accused Silamparasan present. Advocate Mr. Chetty Siddan present for Accused.

**முதல் விசாரணை :**

1. நான் SBI வங்கி தாரமங்கலம் கிளையின் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை கிடைக்கப்பெற்று அதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மேற்படி வங்கியல் சுமார் 8 மாதங்களாக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் எங்களது வங்கி கணக்கு எண் 11420451546 ல் கடந்த 2024 ம் ஆண்டு ஜுன் மற்றும் ஜுலை மாதத்திற்கான பரிவர்த்தனைகள் விபரம் அடங்கிய வங்கி கணக்கு பட்டியலை எடுத்து வந்துள்ளேன். **அது ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. ம.சா.ஆ.9 ஆவணத்தில் 18.06.2024 ம் தேதி புகார்தாரர் ரூ.9,50,000/– மற்றும் ரூ.5,25,000/– ம் பணமாக எடுத்துள்ளார் என்றால் சரி. ம.சா.ஆ–3 ஆவணத்தின் படி புகார்தாரர் 24.07.2024 ம் தேதி எங்களது வங்கியில் ரூ.16,00,000/– க்கான இவ்வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்தினார் என்றால் சரி. மேற்படி காசோலை 29.07.2024 ம் தேதி போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.25 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,

Fast Track Court,
Omalur.